# ஜெயங்கொண்டம் நகராட்சி

| DATE OF MEETING OF THE COUNCIL | MCR NO | SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| | | **நகர் மன்ற அவசரக் கூட்டம்**<br>2022 – ம் ஆண்டு மே மாதம் 29 – ம் (29.07.2022) வெள்ளிக் கிழமை காலை 10.30 மணி அளவில் ஜெயங்கொண்டம் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கான மன்றப் பொருள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.<br>இக்கூட்டத்தில் நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.<br><br>**நகர் மன்றத் தலைவர்,**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி | |
| 29.07.2022 | 80 | **பொருள்–1**<br>இந்நகராட்சி ஆணையர் அவர்களது ஜீன் 2022 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம். | மன்றம் பதிவு செய்யலாம் |
| 29.07.2022 | 81 | **பொருள்–2**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் மே மற்றும் ஜீன் 2022 ஆம் மாதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பிறப்பு , இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் மன்றத்தின் பார்வைக்கு<br><br>\| \| பிறப்பு \| இறப்பு \| இறந்து பிறந்தவை \|<br>\| மே 2022 \| 129 \| 23 \| 0 \|<br>\| ஜீன் 2022 \| 123 \| 26 \| 0 \|<br><br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம். | மன்றம் பதிவு செய்யலாம் |
| 29.07.2022 | 82 | **பொருள்–3**<br>இந்நகராட்சி பொது பிரிவில் ஆணையாளர் பயன்பாட்டில் ஈப்பு வாகனம் (பதிவு எண்.TN-61 J 7078) ஆல் ஆயில் சர்வீஸ், முகப்பு கண்ணாடி, பிரேக் வேலைகள், பேரிங் , கிளார்ச், ஏசி சர்வீஸ், சஸ்பென்சர், ஷேக்காப்சர் மற்றும் இதர பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள 07.07. 2022 அன்று விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>\| **வ. எண்.** \| M/s. Shiv Motors, Kumbakonam \| M/s. SRI Auto Garage, Kumbakonam \|<br>\| \| **விலைப்புள்ளி** \| **விலைப்புள்ளி** \| | தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>தொகை ரூ.</td><td>தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>1,22,989.00 /-</td><td>1,28,298.60/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u>
<ol>
<li>வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த M/s. Shiv Motors, Kumbakonam நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி 07.07.2022 அன்று நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.</li>
</ol>
<u>ந.க.எண். 4265-2/2021/இ1</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.07.2022</td>
<td>83</td>
<td>
பொருள்–4
நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (புதி) துறை அரசாணை (நிலை) எண்.71, நாள்.13.09.2021–ல் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி ஜெயங்கொண்டம் நகராட்சியில் மேற்காணும் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 இலட்சம் பொது மக்கள் பங்களிப்புடனும், ரூ.5.00 இலட்சம் அரசு மான்யமாகவும் மொத்தம் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பணி திட்டமதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><td>வ. எண்</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்)</td></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.13 நடராஜா நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல்</td><td>ரூ.7.50 இலட்சம்</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு :</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
<u>ந.க.எண் : 5297-2 / 2021 /இ1</u>
</td>
<td>தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>29.07.2022</td>
<td>84</td>
<td>
பொருள்–5
ஜெயங்கொண்டம் நகராட்சி வடக்கு தெரு மற்றும் காமராஜபுரம் பகுதியில் அமைந்துள்ள வளத்தான்குளம் ஏரியில் தாமரை செடிகள் மற்றும் கழிவுநீர்கள் கலந்து துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுரைக்கிணங்க வளத்தான்குளம் ஏரியில் உள்ள தாமரை செடிகளை அகற்றவும் மற்றும் கழிவுநீர்களை சுத்தப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு :</u>
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>பொது மக்கள் நலன் கருதி, பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி</li>
</ol>
</td>
<td>தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br>**<u>ந.க.எண் : 2091 / 2022 /இ1</u>** | |
| 29.07.2022 | 85 | **பொருள்–6**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது அறிவுரையின்படி, புதிய திட்டமாக அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் மியா வாக்கி (குறைந்த இடத்தில் அதிக மரங்கள் வளர்தல்) காடு அமைக்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி, ஜெயங்கொண்டம் நகராட்சி வார்டு எண்.19 விசாலாட்சி நகர் பகுதியில் மியா வாக்கி காடு அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் : 2432 / 2022 /இ1</u>** | தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது |
| 29.07.2022 | 86 | **பொருள்–7**<br>ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16–ல் சிதம்பரம் ரோடு சீனிவாச நகர் சந்திப்பில் உள்ள சிறுபாலம் முற்றிலும் சேதமடைந்த நிலையில் உள்ளதாலும் கழிவுநீர் சாலைகளில் செல்வதாலும் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, சீனிவாச நகரில் புதியதாக RCC சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**3.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 4444 / 2021 / இ1</u>** | தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது |
| 29.07.2022 | 87 | **பொருள்–8**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு (R.O Water Purifier) பழுது நிலையில் உள்ளதால் நகராட்சி ஊழியர்கள், ஒப்பந்த பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் நகராட்சிக்கு வரும் பொது மக்களுக்கு குடிநீர் வசதி இல்லாமல் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, நகராட்சியில் புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு (R.O Water Purifier) அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**1.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மேற்கண்ட செலவினத்தினை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 3644/ 2021 / இ1</u>** | தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது |
| 29.07.2022 | 88 | **பொருள்–9**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் பொது சுகாதார பயன்பாட்டிற்காக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 2015 ல் ஜே.சி.பி வாகனம் (பதிவு எண். TN-61 J 2094) கொள்முதல் செய்யப்பட்டது. மேலும், தெருக்களில் உள்ள சிறு மழைநீர் வடிகால்களை தூர் வாறுவதற்கு ஏதுவாக சிறிய அளவிலான பக்கெட் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**50,000/- க்கு** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>** | தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 4088 – 3 / 2021 / இ1</u>** | |
| 29.07.2022 | 89 | **பொருள்–10**<br>அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் நகராட்சி எல்லை பகுதிக்குட்பட்ட ஜெயங்கொண்டம் கிராம புல எண்.447/1 – 07550 ச.மீ. இடத்தில் சுமார் 00120 ச.மீ. இடத்தில் நியாய விலை கடை அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது எனவும், மேற்படி கிராம புல எண் கிராம கணக்குகளின்படி அரசு புறம்போக்கு பாதை என வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேற்படி கிராம புல எண்களில் சுமார் 00120 ச.மீ. இடத்தில் நியாய விலை கடை அமைப்பதற்கு ஏதுவாக நகராட்சி சபையில் தீர்மானம் நிறைவேற்றி அதன் தீர்மான நகலினை அனுப்பி வைத்திட வட்டாட்சியர், உடையார்பாளையம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற **29.06.2022** ஆம் தேதிய ந.க.ஆ1/3634/2022 எண்ணிட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 2823 / 2022 / எப்.1</u>** | தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது |
| 29.07.2022 | 90 | **பொருள்–11**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் தற்சமயம் ஒரு இளநிலை உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது. இந்நிலையில் இவ்வலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வரும் திருமதி.சி.லெட்சுமி என்பவர் தான் 25.07.2014 முதல் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு கோரி 16.06.2022 அன்று இவ்வலுவலகத்தில் விண்ணப்பம் அளித்திருந்தார். மேற்படி விண்ணப்பத்தினை மேலொப்பம் செய்து உரிய நடவடிக்கைக்காக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.<br>அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது ஓ.மு.எண்.1900/2022/அ2 எண்ணிட்ட 15.07.2022 ஆம் நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகளின்படி அலகு X–ன் கீழ் உள்ள பணியாளர்களின் பதவி உயர்வு பணியிடத்தினை பொறுத்தமட்டில் நியமன அதிகாரி நகராட்சி ஆணையர் எனவும், விதிகளின்படி பதிவறை எழுத்தருக்கு பதவி உயர்வு வழங்க உரிய நடைமுறைகளை பின்பற்றி நகராட்சி ஆணையரே நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, திருமதி.சி.லெட்சுமி, பதிவறை எழுத்தர் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.2507 / 2022 / சி1</u>** | உரிய நடவடிக்கைகளை பின்பற்றி நகராட்சி ஆணயர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம், தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 29.07.2022 | 91 | **பொருள்–12**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் தற்சமயம் மின் பணியாளர் பணியிடம் காலியாக உள்ளது. இந்நிலையில் இவ்வலுவலகத்தில் மின்பணி உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.த.சிவானந்தம் என்பவர், தான் சுமார் 25 ஆண்டு காலமாக மின்பணி உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனக்கு மின் பணியாளர் பதவி உயர்வு கோரி 19.07.2022 அன்று இவ்வலுவலகத்தில் விண்ணப்பம் அளித்திருந்தார்.<br>மேலும், தான் கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் மூலம் நடத்தப்பட்ட மின் பணியாளர் பதவி உயர்விற்கான பயிற்சியில் கலந்து கொண்டு சான்று பெற்றுள்ளதாகவும் மற்றும் ITI Electrician சான்றும் பெற்று பணிப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது 36270/09/எப்3 எண்ணிட்ட 20.10.2010 ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, தனக்கு மின் பணியாளர் பதவி உயர்வு வழங்கிட கோரி தெரிவித்துள்ளார். எனவே, திரு.த.சிவானந்தம், மின்பணி உதவியாளர் என்பவருக்கு மின் பணியாளர் பதவி உயர்வு வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 3096 / 2022 / சி1</u>** | உரிய நடவடிக்கைகளை பின்பற்றி நகராட்சி ஆணயர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம், தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்ப டுகிறது. |
| 29.07.2022 | 92 | **பொருள்–13**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு ஒரு ஆண்டிற்கு தேவையான A4 Size பேப்பர், Legal Size பேப்பர், எழுது பொருட்கள், கணினி பயன்பாட்டிற்கு தேவையான டோனர்கள் மற்றும் அனைத்துப் பிரிவுகளுக்கு தேவையான பதிவேடுகள் ஆகியவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும்.அச்செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண்.1166 / 2019 /அ1</u>** | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |
| 29.07.2022 | 93 | **பொருள்–14**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் திரு.சோ.ராஜேஷ் என்பவர் தூய்மைப் பணியாளராக **10.12.2021** முதல் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னை திருவாரூர் நகராட்சிக்கு பணியிட மாறுதல் வேண்டி **28.01.2022** அன்று இவ்வலுவலகத்தில் மனு அளித்திருந்தார்<br>அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களது அ.தி.மு.எண்.610/2022/அ**3** எண்ணிட்ட **10.03.2022** ஆம் நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட பணியாளரை பணி மாறுதல் செய்வதால் ஏற்படும் காலிப்பணியிடம் தொடர்பாக நகராட்சி | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | ஆணையரின் குறிப்புரை, நகராட்சி மன்ற தீர்மான நகலுடன் கடிதம் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன் பேரில், இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட **25** தூய்மை பணியாளர் பணியிடத்தில் தற்போது **21** நபர்கள் பணிபுரிந்து வருவதாகவும், ஒப்பந்த அடிப்படையில் **134** நபர்கள் பணிபுரிந்து வருவதாகவும் மேற்கண்ட தூய்மை பணியாளர் திரு.சோ.ராஜேஷ் என்பவரை திருவாரூர் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்வதால் பொது சுகாதாரப் பணிகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஆட்சேபணையின்மையினை இந்நகராட்சி ஆணையர் குறிப்புரை வழங்கியுள்ளார்கள். எனவே, திரு.சோ.ராஜேஷ் என்பவரை திருவாரூர் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்வது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**ந.க.எண். 5940 / 2021 / சி1** | |
| 29.07.2022 | 94 | **பொருள்–15**<br>இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யப்பட்ட பதிவேடுகள் 2019 முதல் 2022 வரை உள்ள பதிவேடுகள் பைடிங் செய்ய உத்தேச தொகை ரூ.50,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.238 /2022/எச்1** | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |
| 29.07.2022 | 95 | **பொருள்–16**<br>தமிழ்நாடு அரசாணை எண். 79 நாள்.02.06.2022 தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் 2022 ஜீன் 03 ஆம் தேதி முன்னாள் முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு தற்போதைய முதல்வர் துவக்கி வைத்ததின் பெயரில் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் ஜெயங்கொண்டம் நகராட்சியில் துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு தேவையான (Multi Colour A4 Size) விழிப்புணர்வு நோட்டீஸ் 11,000 எண்ணிக்கை, விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் கைகளில் எடுத்துச்செல்லும் குச்சி பலகை 500 எண்ணிக்கை அச்சிட்டு வழங்க உத்தேச தொகை ரூ.1,50,000/– மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது. மேலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி கோரி பணி மேற்கொள்ள அனுமதி வேண்டடப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்.238 /2022/எச்1** | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |
| 29.07.2022 | 96 | **பொருள்–17**<br>இந்நகராட்சி 21 வார்டுகளில் வீடுகளில் தினந்தோறும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தரம் பிரித்து வாங்குவதற்கு போதிய வாகனம் இல்லாத காரணத்தால் தள்ளு வண்டி மூலம் வீடுகளில் குப்பைகளை தரம் பிரித்து வாங்கப்படுகிறது. தள்ளுவண்டிகளில் 20 வீடுகளில் குப்பை வாங்கும் போது நிரம்பி விடுகிறது. எனவே, நமது நகராட்சியில் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்பாக வாங்கப்பட்ட மூன்று சக்கர ரிக்ஷா 5 எண்ணிக்கையில் பழுதடைந்து உள்ளது. அதனை சரிசெய்து வீடுகளில் குப்பைகளை தரம் பிரித்து வாங்க ஏதுவாக இருக்கும். எனவே, 5 எண்ணிக்கை மூன்று சக்கர ரிக்ஷா பழுது நீக்கம் செய்ய தோராய தொகை ரூ.60,000/– க்கு மன்றம் | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண்.238 /2022/எச்1</u>** | |
| 29.07.2022 | 97 | **பொருள்–18**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் மழைக்காலங்களில் பொது மக்களுக்கு டெங்கு நோய் பரவா வண்ணம் (DBC) டெங்கு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு அனைத்து வீடுகளிலுள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசுப்புழு உற்பத்தியாக வண்ணம் கொசுப்புழு கொல்லி (Temephos BT) மற்றும் கொசு ஒழிப்பு புகை இயந்திரங்களில் பயன்படுத்தப்படும் மாலத்தியின் டெக்னிக்கல், குப்பைகளை மக்கச் செய்யும் EM Solution (Effective Micro Organisms) இருப்பு குறைவாக உள்ளதால் கீழ்கண்ட எண்ணிக்கையில்<br>1. Temephos, BT = 100 லிட்டர்<br>2. மாலத்தியான் டெக்னிக்கல் = 200 லிட்டர்<br>3. EM Solution = 200 லிட்டர்<br>மேற்கண்டவாறு எண்ணிக்கையில் வாங்கி வழங்கிட தோராய செலவு தொகை ரூ.5,00,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண்.238/2022/எச்1</u>** | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |
| 29.07.2022 | 98 | **பொருள்–19**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண்.44/2020/இ2 நாள்.22.06.2022 கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் தொடர்பான பொது மக்களுக்கு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து கொடுப்பது மற்றும் பொது கழிப்பிடங்களை தூய்மையாக பயன்படுத்துவது, பொது இடங்களில் குப்பை கொட்டாமல் இருப்பது, பொது இடங்களில் எச்சில் துப்பாமல் இருப்பது, பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்ப்பது, துணிப்பை உபயோகப்படுத்த ஊக்கப்படுத்துவது, டெங்கு மற்றும் கொரோனா பரவல் பொது சுகாதாரம் போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்த கிராமிய கலைக்குழு மூலம் கரகாட்டம், நாடகம், ஒயிலாட்டம் மற்றும் ஆடல் பாடல் மூலமாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 3 நாட்கள் 06.07.2022 முதல் 08.07.2022 வரை வாய்ப்பு வழங்க திரு.எ.சந்தானகிருஷ்ணன் என்பவர் கடித்ததில் தென்னகத்து கலைத் தென்றல் ‘நாட்டுபுற நாயகன்‘ மீரா சந்தானம், கிராமிய கலைக்குழு, பொரியார் நகர், வல்லம், தஞ்சாவூர் என்ற நாடக குழுவால் கேட்டுக்கொள்ளப்பட்டது மேற்கண்ட நிகழ்ச்சி நடத்த வாய்ப்பு கிராமிய கலைக்குழுக்கு வழங்கிட பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட ஆகும் உத்தேச தொகை ரூ.60,000/– மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டத்தற்கும் மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண்.128 /2022/எச்1</u>** | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |

<table>
<tr>
<td>29.07.2022</td>
<td>99</td>
<td>
பொருள்–20<br>
ஜெயங்கொண்டம் நகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் ஏற்கனவே உபயோகித்து வந்த கிரைண்டர் பழுதடைந்து மீண்டும் உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளதால் புதியதாக கிரைண்டர் 2 எண்ணிக்கை வாங்கிட உத்தேச செலவுத் தொகை ரூ.37,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
பணியின் அவசர அவசியம் கருதி , நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண். 1219 / 2014 / அ3</u>
</td>
<td>தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>29.07.2022</td>
<td>100</td>
<td>
பொருள்–21<br>
ஜெயங்கொண்டம் நகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு புதியதாக 2 எண்ணிக்கை கிரைண்டர் வாங்கிட 07.07.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்.</td><td>M/s. ராஜலெட்சுமி விலாஸ், ஜெயங்கொண்டம்.</td><td>M/s. சரவணா மெட்டல் மார்ட், ஜெயங்கொண்டம்.</td><td>M/s. ஸ்ரீ ஆண்டாள் ஸ்டோர், ஜெயங்கொண்டம்.</td></tr>
<tr><td></td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>35,000/-</td><td>37,500/-</td><td>37,000/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த M/s. ராஜலெட்சுமி விலாஸ், ஜெயங்கொண்டம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி 28.06.2022 அன்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<u>ந.க.எண். 1219 / 2014 / அ3</u>
</td>
<td>தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>29.07.2022</td>
<td>101</td>
<td>
பொருள்–22<br>
ஜெயங்கொண்டம் நகராட்சி பேருந்து நிலையத்தில் 10×10 சதுர அடி அளவில் "ஆவின் பாலகம்" அமைப்பதற்கு இடம் வேண்டி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., திருச்சிராப்பள்ளி–23 என்ற நிறுவனம் விண்ணப்பித்துள்ளார். அதன்படி, மேற்கண்ட இடத்திற்கு நிபந்தனைக்குட்பட்டு மாதம் ஒன்றுக்கு வாடகை நிர்ணயம் செய்த தொகை ரூ.4,650/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<u>ந.க.எண் : 2907 / 2022 /இ1</u>
</td>
<td>தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 29.07.2022 | 102 | **பொருள்–23**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி பேருந்து நிலையத்தில் 7×7 சதுர அடி அளவில் "INDIA- 1 ATM " அமைப்பதற்கு இடம் வேண்டி **M/s Sri Srinivasa Enterprises, ஜெயங்கொண்டம்** என்ற நிறுவனம் விண்ணப்பித்துள்ளார். அதன்படி, மேற்கண்ட இடத்திற்கு நிபந்தனைக்குட்பட்டு மாதம் ஒன்றுக்கு வாடகை நிர்னயம் செய்த தொகை ரூ.2,280/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் : 4584 / 2021 /இ1** | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |
| 29.07.2022 | 103 | **பொருள்–24**<br>ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட கடைவீதியில் பொதுக்கழிப்பிடம் இல்லாததால் நகருக்கு வந்து செல்லும் பொதுமக்கள் இருபாலரும் இயற்கை உபாதைகளை கழிப்பதற்கு பெரிதும் சிரம்மப்படுகின்றனர் இதனை தவிர்க்கம் பொருட்டு செயங்கொண்டம் கடைவீதியில் புதிதாக கழிப்பிடம் ஒன்று கட்டி கொடுக்கும்படி அரியலூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தின் மூலம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட இடத்தில் போதிய இடம் வசதி இல்லாத காரணத்தினாலும், பொது மக்கள் நலன் கருதி, நகராட்சி வசம் உள்ள Mobile Toilet–ஐ மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு வைக்கலாம். மேற்கண்ட மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் : 5328 / 2021 /இ1** | தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. |

**ஆணையர்(பொ),**
ஜெயங்கொண்டம் நகராட்சி